# ப்ராம்ப்ட்டன் நகர கட்டிட உரிமையாளர்கள் செப்டம்பர் 22 தேதி வாக்கில் தங்களிடம் வாடகைக்கு இருப்பவர்களுக்கு உஷ்ணப்படுத்தும் வசதி செய்து கொடுத்துவிட அறிவுறுத்தப்படுகிறார்கள்

ப்ராம்ப்ட்டன், ON (செப்டம்பர் 8, 2021) – செப்டம்பர் 22, 2021 முதல், கட்டிட உரிமையாளர்கள் தங்களிடம் வாடகைக்கு இருப்பவர்களுக்கு உஷ்ணப்படுத்தும் வசதி செய்து கொடுக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

குறிப்பாக, கட்டிடங்களை வாடகைக்கு விடும் கட்டிட உரிமையாளர்கள், தங்கள் கட்டிடங்களில் செப்டம்பர் 15 ஆம் தேதி துவங்கி, பொருத்தமான நிலையான உஷ்ணப்படுத்தும் வசதிசெய்து கொடுக்க வேண்டும் என வாழ்க்கை வசதி சேவைகள் உபசட்டமானது கோருகிறது. இருப்பினும், காலநிலை முன்னறிவிப்பின்படி, செப்டம்பர் மாதம் முழுக்க ஏறத்தாழ 20 டிகிரி செல்சியஸ்க்கு சற்று கூடுதலான வெப்பமே நிலவும் என அறிவித்தாலுமே, நகர நிர்வாகம் முன்கூட்டியே செப்டம்பர் 15 முதல் செப்டம்பர் 22 வரை இந்த புதுப்பித்தலுக்கான அறிவுறுத்தலை வெளியிட்டிருக்கிறது.

இந்த அறிவிப்பானது வாழ்க்கை வசதி சேவைகள் உபசட்டத்தின் பிரிவு 15 -ஐ ஒட்டி வெளியிடப்படுகிறது; இதில், உப சட்டங்கள் அமலாக்க இயக்குனர் அவர்கள், நகரசபையின் நியமனம் செய்யப்பட்ட அதிகாரம் கொண்டவராக இருந்தபடி, கட்டிட உரிமையாளர்கள் இப்படியான உஷ்ணப்படுத்தும் வசதியை செய்துகொடுக்க வேண்டிய தேதிகளை நீட்டிக்கவோ குறுக்கவோ செய்யலாம்; இது சீதோஷ்ணநிலை மாற்றத்தைப் பொருத்தாக இருக்கும்.

வாழக்கை வசதிசேவைகள் உப சட்டம் பற்றிய மேலும் தகவல்களுக்கு, இங்கு கிளிக் செய்க

-30-

**ஊடக தொடர்பு**
ப்ரப்ஜோத் கைந்த்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Prabhjot.Kainth@brampton.ca